பக்கம்–

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,திண்டுக்கல்**

**அமர்வு வழக்கு எண்.184/2023**

**அ.சா. 13 –ராஜசேகர் – த/பெ.செல்வநாயகம்**

**நாள்.12.03.2026**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

1வது ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. 2வது எதிரி இறப்பு

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.த.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கையில் காலம் 11ல் இறப்பிற்கான காரணம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அது தனியாக பிரேத விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரை எங்கு வைத்து யாரால் தயார் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். அ.சா.1. தனது புகார் மனுவில் தனது ஓனர் அரவிந்த் குமார் அறிவுறுத்தலின் படி சம்பவத்தன்று முதலில் மாலைப்பட்டியில் வேலை செய்ததாகவும், அதன் பின் வெல்டிங் பட்டறையில் சாப்பிட்டு விட்டு மீண்டும் அரவிந்த் குமார் அறிவுறுத்தலின் படி அணில் சேமியா கம்பெனியில் வந்து வேலை செய்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1. புகாரில் எதிரிகள் அன்று லீவு எடுத்துக் கொண்டு சென்று விட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1.ம் இறந்து போன அழகுபாண்டியும் எத்தனை மணிக்கு எந்தெந்த இடங்களில் வேலை செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் அ.சா.1.ம் இறந்து போன அழகுபாண்டியும் பழனிரோடு அணில் சேமியா கம்பெனியில் வேலை செய்த விவரம் அறிந்து எதிரிகள் வந்தார்கள் என்ற விவரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சம்பவ இடத்தில், சம்பவ நேரத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 சம்பவத்தை கண்ணில் பார்த்து தடுக்க முயன்றதாகவோ, சத்தம் போட்டு அருகிலிருந்தவர்களை அழைத்ததாகவோ, பயந்து போய் ஓடிப்போனதாகவோ புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1.. அந்த இடத்திலிருந்து ஓனர் அரவிந்த்குமாருக்கு தகவல் கொடுத்துள்ளார். சம்பவம் நடந்த பூச்செண்டு பெட்ரோல் பங்க்கை சுற்றிலும் சுற்றுச் சுவரும் அதன் அருகில் மரங்களும் செடிகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். சம்பவம் நடந்த பெட்ரோல் பகுதியானது நகரின் மையப்பகுதி என்றால் பிரதான சாலைக்கு அருகில் அமைந்துள்ளது. மையப் பகுதி என சொல்ல முடியாது. பள்ளபட்டி பஞ்சாயத்து எல்லையில் அமைந்துள்ளது. திண்டுக்கல்–பழனி சாலை என்பது நகரின் பிரதான சாலைதான். சம்பவம் நடந்த பெட்ரோல் பங்கில் எப்போதும் இருசக்கர வாகனத்திலும், 4 சக்கர வாகனத்திலும் அதிகம் ஆட்கள் வந்து பெட்ரோல் போட்டுச் செல்வார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பெட்ரோல் பங்கில் கேமரா 10க்கும் மேற்பட்ட கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் எண்ணிக்கை தெரியாது. கேமராக்கள் உண்டு. திண்டுக்கல்–பழனி தேசிய நெடுஞ்சாலையிலும்,

இருபுறங்களிலும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மற்றும் போக்குவர்துது சிக்னலிலும் கண்காணிப்பு கேமராக்கல் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததற்கு முன்பும், பின்பும் எதிரிகள் அந்த வழியாக வந்து சென்றார்கள் என்பதற்கான வீடியோ ஆதாரங்களை சேகரித்தேனா என்றால் சேகரிக்கவில்லை. நான் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் ஜனனா லாட்ஜில் எந்த இடத்தில் எந்த பகுதியை நோக்கி கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருக்கிறது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பார்வைமகஜரில் பெட்ரோல் பங்கிற்கும், ஜனனா லாட்ஜிற்கும் இடையே தென்வடலாக ஒரு சாலை இருப்பதாக குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் சிறிய சந்து உள்ளது. ஜனனா லாட்ஜிலிருந்து பென்டிரைவில் வீடியோ பதிவு எடுத்தேன் என்றால் சரிதான். Hard disk ஐ எடுத்து சமர்ப்பிக்கவில்லை என்றால் Hard disk லிருந்து பென்டிரைவில் காப்பி செய்து பென்டிரைவையும், டிவிடியையும் தாக்கல் செய்துள்ளேன். டிவிடியும் அதில் பதிவான வீடியோவின் நகல்தான். அதன் 65(B) சான்றிதழ் இணைத்துள்ளேன். நான் முறையாக Hard disk ஐ கைப்பற்றி தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. தொழில் நுட்பங்களை பயன்படுத்தி செய்யாத ஒரு செயலை செய்யாத ஒரு நபர் செய்ததாக வீடியோ மார்பிங் செய்யக் கூடிய தொழில்நுட்பம் இருக்கிறது எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் கைப்பற்றி கொடுத்த வீடியோவையும், எதிரிகளின் முகத்தை ஒப்பிட்டு பார்க்கக் கூடிய பேஸ்மேட்சிங் செய்து பார்க்கவில்லை என்றால் முகம் வீடியோவில் தெளிவாக தெரிவதால் மேட்சிங் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அ.சா.10. மில் சிவா என்பவர் காவல்துறையின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த மறுநாள் காலை 09.00மணிக்கு எதிரிகளை கைது செய்ததாக குற்றப்பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து எதிரிகளை கைது செய்ததாக சொல்லும் இடம் சுமார் 5 கிமீ தூரம் இருக்கும். ஒப்புதல் வாக்குமூலம் எங்கு வைத்து யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் நான்தான் தயார் செய்தேன், எனக்கு உதவியாக சிறப்பு சார்பு ஆய்வாளர் மணிமுருகேசன் இருந்தார். ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் வைத்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் லேப்டாப்பில் தட்டச்சு செய்தேன். எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரை தட்டச்சு செய்யப்பட்டது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் 1வது எதிரியிடம் 09.15மணிக்கு ஆரம்பித்து 10.00மணிக்கு முடித்தேன். 10.15மணிக்கு 2வது எதிரியிடமிருந்து வாக்குமூலம் பெற ஆரம்பித்து11.00மணிக்கு முடிக்கப்பட்டது. வாக்குமூலத்தில் ஆரம்பித்த நேரம் மட்டும் சொல்லியிருக்கிறேன். முடிக்கப்பட்ட நேரம் சொல்லவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் பாலித்தின் கவரில் இரத்தம் பட்ட உடைகளை ஒப்படைத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அத்தாட்சியில் பாலிதின் கவர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். படிவம் 91ல் சாட்சிகளிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் அத்தாட்சியில் மட்டும் தான் கையெழுத்து வாங்குவோம். படிவம் 91ல் வாங்குவதில்லை. இறந்து அழகுபாண்டி மீது சாணார்பட்டி காவல்நிலையத்தில் போக்சோ வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. என் விசாரணையில் அது குறித்து யாரும் சொல்லவில்லை. இறந்து போன அழகுபாண்டியின் அம்மாவான அ.சா.5. சம்பவத்தன்று என் மகனை போக்சோ வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்தான் கொன்றிருப்பார்கள் என புகார்

கொடுத்தார் என்றாலும் அதை நான் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. இறந்து போன அழகுபாண்டி போக்சோ வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணையும் அவரின் பெற்றோரை மிரட்டியது சம்மந்தமாக சாணார்பட்டி காவல்நிலையத்தில் பாதிக்கப்பட்ட பெண் தரப்பில் புகார் கொடுக்கப்பட்டது என்றும் பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் இறந்து போன அழகுபாண்டியின் வீட்டை அடித்து நொறுக்கி விட்டதாக அழகுபாண்டியின் பெற்றோர் சாணார்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த போது சம்பவ இடமான பெட்ரோல் பங்கின் மேலாளர் புகார் கொடுத்ததை நான் பெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1. அ.சா.2. இருவரும் போக்சோ வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் என்றால் தெரியாது. நான் கைப்பற்றிய வீடியோவில் எதிரியின் வலது புற முகம் மட்டுமே தெரிந்தது என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான பட்டியல் சாட்சிகள் 3,4 ஆகியோர்களை 04.09.2023 அன்று குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1. அவர்களிடம் 164(3) ன் படி வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் எதிரியை தெரியாது, சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை, காவல்துறை சொல்லிதான் எதிரியை தெரியும் என சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்த நபர் அளவுக்கு அதிகமான மது குடித்திருந்தார் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வட்டார தடய அறிவியல் உடல் உறுப்பு அறிக்கையிலும் இறந்த நபர் அளவுக்கு அதிகமான மது குடித்திருந்தார் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களில் தடய நிபுணர் அறிக்கையில் இரத்த வகை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது எதிரியின் அரெஸ்ட் பார்ம்ல் காலம் 8ல் என்னென்ன பொருட்கள் கைப்பற்றினேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளது போல் எந்த சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், வழக்கு சொத்துக்கள், சான்று பொருட்கள் எதுவும் சொன்ன முறையில் கைப்பற்றப்படவில்லை என்றாலும் , எதிரிகளை சொன்ன முறையில், சொன்ன நேரத்தில் ,சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யப்படவில்லை என்றாலும், எதிரிகள் தன்னிச்சையாக என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் சான்று பொருள் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும், உரிய முறையில் புலன்விசாரணை நான் செய்யவில்லை என்றாலும் சம்பவம் நடந்த பெட்ரோல் பங்கில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை பதிவு செய்து கொடுத்தால் அது வழக்கிற்கு விரோதமாகி விடும் என்பதற்காக அவற்றை நான் கைப்பற்றி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.5. மற்றும் சம்பவம் நடந்த பெட்ரோல் பங்க் மேலாளர் இருவரும் கொடுத்த புகார் வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் அதை பதிவு செய்யவில்லை என்றாலும் அதை தவிர்த்து இறுதி அறிக்கை எதிரிகளுக்கு எதிராக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிகளும் குற்றசாட்டிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை – இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.12 20:58:58 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.